**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : CC No. 274/2025**
**Prosecution Witness : LW 12 / PW 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : Karthickraja | | : |
| Father / Husband Name | : Vajaravelu | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( Accused present )**
**<u>Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of 04/06/2026</u>**

**<u>முதல் விசாரணை ( அரசு தரப்பு )</u>**
நான் தற்பொழுது பொன்னேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.02.2025 அன்று ராஜவேல் என்பவர் அளித்த புகாரை பெற்று பொன்னேரி காவல் நிலைய குற்ற எண் 70/2025 U/s. 324(2), 115(2), 296(b), 118(1) BNS என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அறிக்கை **அ.தசா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினம் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜவேல் , ரஞ்சித்குமார் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார். பின்னர் சாட்சிகள் ராஜன் மற்றும் ஜெகதீசன் முன்பு பார்வை மகஜர் ஒன்றை தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.தசா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வரைபடம் **அ.தசா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரியை 23.02.2025ம் தேதி காலை 10.40 மணியளவில் பொன்னேரி தடப்பெரும்பாக்கம் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் வைத்து கைது செய்தேன். இவ்வழக்கின் எதிரி தானாக முன்வந்து அளித்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அப்துல் ரஷித் மற்றும் முனிசேர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியின் அடிப்படையில் இவ்வழக்கின் சொத்தான vivo T3x5G என்ற செல்போன் மற்றும் செங்கல் ஒன்றை பிரபு மற்றும் அருன் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றேின். அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.தசா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகஜர் **அ.தசா.ஆ. 6ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் அடிப்பட்ட நபரான ராஜவேல் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அம்மு ஷீபா என்பவரை விசாரித்தார். அவர் அளித்திருந்த விபத்து பதிவேடு **அ.தசா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மேல் சிகிச்சைக்காக ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மருத்துவர் தனராஜ் சிகிச்சை அளித்து காயச் சான்றிதழ் அளித்தார். அந்த காயச் சான்றிதழ் **அ.தசா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இவ்வழக்கின் தன்மையின் பேரில் வழக்கின் பிரிவுகள் U/s. 324(2), 115(2), 296(b), 118(1), 351(3) BNS ல் இருந்து U/s. 324(2), 115(2), 296(b), 118(1) BNS ஆக மாற்றம் செய்யப்பட்டது. அந்த மாறுதல் அறிக்கை **அ.தசா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91ன் கீழ் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். அந்த படிவம் **அ.தசா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றப்பட்ட பொருட்கள் **சா.பொ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு)**

புகார்தாரர் அளித்திருந்த புகாரில் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் சரிவர விசாரணை செய்யாமல் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் மறுக்கிறேன்.